பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டில் பி.யு.சி. வகுப்பில் மொத்தத்தில் 1,500 ஸ்தானங்கள் காலியாக இருந்தன. ஆகவே, ஷிப்ட் முறையைப் பற்றித் தத்துவ ரீதியாகப் பேசுவதில் பயன் இல்லை. ஷிப்ட் முறை அவசியமில்லை. அதை நிறைவேற்றுவதில் சிரமம் இருக்கிறது என்று முன்பே கூறினேன்.

Industrial congestion around City

* 107 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the measures the Government have proposed to adopt for preventing further industrial congestion around Madras and regulating the future growth of industries in the City's suburbs according to a set pattern?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : சென்னை நகரிலே நெரிசலைத் தவிர்க்கும் வகையில் வெளியே தள்ளி தொழிற்சாலைகளை அமைக்க தொழில் அதிபர்கள் முன் வந்தால் அவர்களுக்குத் தனியாக ஏதேனும் அனுகூலங்கள் கொடுக்கப்படுகின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேண்டிய வசதிகள் அளிக்கப் படுகின்றன. அதற்கு மேல் ஒன்றும் அவசியம் இல்லை.

விவசாயக் கருவிகள் உற்பத்தி

** 108* கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு உதவியாக உள்ள தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் வகுக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : The following departmental units are already functioning in Thanjavur district :—

(1) *Brassware Unit, Kumbakonam* : Manufacturing dusters, sprayers, inter-cultivators and similar agriculture implements.

(2) *General Purpose Engineering Workshop, Mayuram* : Manufacturing among other things, inter-cultivators, bund formers, gundakas.

(3) *Carpentry and Blacksmithy Unit, Mannargudy* : Manufacturing among other things, bund formers, inter-cultivators, Gundakas, Wet land buttlars.

(4) *Model Foundry Industrial Estate, Thanjavur* : Manufacturing among other things, Mould Board ploughs, Melur ploughs, etc.

---

a Printed as Appendix I on pages 585-586.

5th August 1966]

The Agro-Industries Corporation, which has been set up recently will consider the question of starting such of those production units as are necessary in Thanjavur district as well as in other districts.

மரைன் டீசல் இயந்திரத் தொழிற்சாலை

* 109 கேள்வி.—திரு. செ. மாதவன் :
திரு. எம். எஸ். செல்வராஜன் : } கனம் முதல் அமைச்சர்

7—8—1965-ல் குறுகியகாலக் கேள்வி எண் 1-க்கு அளித்த பதிலை யொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை அருகில் எண்ணூரில் படகு டீசல் இயந்திரத் தயாரிப்பு நிலையம் ஏற்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is reason to believe that the Government of India have decided not to set up the Marine Diesel Engine Factory in Madras State. No official communication has, however, been received from them.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, முன்பு இந்தச் சட்ட மன்றத்திலே தொழிலமைச்சர் அவர்கள், இந்தத் தொழிற்சாலை தமிழ் நாட்டில் நிச்சயமாக ஆரம்பிக்கப்படும், அதற்கு மத்திய சர்க்கார் பணம் ஒதுக்கியிருக்கிறது என்று கூறினார்கள். இப்போது அது கைவிடப்படுவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பணம் ஒதுக்கியிருப்பதாகக் கூறியதாக நினைவு இல்லை. அப்போது இந்தத் தொழிற்சாலைக்கான இடம் கேட்டார்கள். அந்த இடத்தை மத்திய அரசிலிருந்து சம்பந்தப்பட்ட அமைச்சர் வந்து பார்த்தார். அந்தத் தொழிற் சாலை இங்கு ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும் ஆராய்ந்து இதை வேறு இடத்தில் அமைப்பது நலம் என்று மத்திய அரசாங்கம் கருதுவதாகத் தோன்றுகிறது. இது வரை இறுதியான முடிவு ஒன்றும் தெரியவில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நம்முடைய ராஜ்யத்தில் வேறு ஏதேனும் இடங்களில் இந்தத் தொழிற்சாலையை அமைக்கப் பரிசீலனை செய்யப்பட்ட விவரம் இந்த ராஜ்ய அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றிய தகவல் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இது பற்றி முன்பு ஒரு முறை சட்ட சபையில் கேட்டபோது அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள், இதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது, நிச்சயமாக இந்தத் தொழிற்சாலை இங்கே நிறுவப்படும் என்று கூறினார்கள். இப்போது இது மாறுவதற்குக் காரணம் என்ன ? ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் விலை கொடுத்து வாங்கப்பட்ட நிலமா அல்லது அரசாங்கத்தின் நிலமா ?